**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்</u>**
**<u>மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்</u>**

**<u>MCOP No. 114/2020</u>** 12-02-2026 **எ.ம.சா.3**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | பெருமாள்சாமி | தொழில் |
| த/பெ | ஏழுரான் | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**<u>முதல் விசாரணை</u>**

சத்தியமாக சொல்கிறேன். நான் பொள்ளாச்சி நெகமம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருக்கிறேன் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். 27.06.2020 ஆம் வருடம் எங்கள் காவல் நிலையத்தில் குற்ற எண் 971/2020 வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் இறந்து போன ராமமூர்த்தி என்பவர் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டதால் மேற்படி வழக்கு Charge abated என்ற முறையில் முடிக்கப்பட்டது. மேற்படி வழக்கில் முதல் தகவல் அறிக்கை டிப்பர் லாரி ஓட்டுனர் மீது பதிவு செய்யப்பட்டது. புலன் விசாரணையின் போது இறந்து போன நபர் தான் லாரியின் பின்புறம் மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டதாக தெரிய வந்ததால் அவருக்கு எதிராக இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. விபத்து சமயத்தில் மேற்படி இருசக்கர வாகனத்தில் 3 நபர்கள் பயணம் செய்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது. புலன் விசாரணையின் அடிப்படையில் இந்த விபத்திற்கு லாரி ஓட்டுனர் காரணம் அல்ல என்பது தெரியவந்துள்ளது. **மாதிரி வரைபடம் சான்றிட்ட நகல் சா.சா.ஆ.2, குற்ற இறுதியறிக்கை சான்றிட்ட நகல் சா.சா.ஆ.3.**

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் தாக்கல் செய்துள்ள இறுதியறிக்கையில் சாட்சிகளின் பட்டியல் இணைக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். புலன் விசாரணை அதிகாரி யார் யாரை விசாரித்தார் என்பது குறித்து எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வரைபடம் என்னால் தயார்

செய்யப்படவில்லை என்றாலும் அது புலன் விசாரணை அதிகாரியாக தயார் செய்யப்பட்டது என்றாலும் சரிதான். மேற்படி மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்ட விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் குற்ற இறுதியறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு RCS செய்யப்பட்டதற்கான ஆவணம் எதுவும் என்னுடைய வழக்கு கோப்பில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. புலன் விசாரணை அதிகாரி தவறுதலாக லாரி ஓட்டுனருக்கு ஆதரவாக எழுதியிருக்க தாக்கம் செய்துள்ளார் என்று சொன்னாலும் இந்த விபத்து இறந்து போனவரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

**4–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

2. சம்பவ இடம் போக்குவரத்து அதிகம் உள்ள இடம் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. மாதிரி வரைபடத்தில் இரண்டு வாகனங்களும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள டயர் மார்க் எந்த வாகனத்துடையது என்பது குறித்து குறிப்பாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் RCS அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வழக்கு முடிக்கப்பட்டதா என்பது குறித்து என்னுடைய கோப்பில் குறிப்புகள் எதுவும் இல்லை. மேற்படி இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் ஏற்கப்பட்டு வழக்கு முடிக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். புலன் விசாரணை அதிகாரி சரிவர விசாரிக்காமல் இறுதியறிக்கை தயார் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

**1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் அழைத்தும் ஆஜராகவில்லை சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.**

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.12 18:31:26 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.